**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C. C. No. 349 /2025** |
| Prosecution witness | : | P.W. 2 |
| List of witness | : | L.W. 4 |
| Name | : | முருகையன் |
| Father's /Husband Name | : | ஆறுமுகம் |
| Village | : | திருகண்ணமங்கை |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 65 |
| Occupation | : | பூக்கடை வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 20th day of May 2026. Accused present.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து வந்து பூக்கடை வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அ.சா.1 ஐ எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்டுகிறது.** மேற்படி கையொப்பத்தை எப்பொழுது போட்டேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

**அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பிற்கு பகுதி ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 பிரிவின் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் வழக்கு கோப்பின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 12.07.2023 ம் தேதி மதியம் 01.30 மணியளவில் நானும் ராஜேந்திரன் என்பவரும் வடகண்டம் வெட்டாற்று பாலம் அருகே நின்று கொண்டிருந்த போது குடவாசல் போலீசார் நின்று விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றும், என்னவென்று நாங்கள் கேட்ட போது கடந்த 10.07.2023 ம் தேதி இரவு இருசக்கர வாகனத்தில் தனியாக வந்த சபரிநாதன் என்பவருடன் ஆஜர் எதிரி கத்தியை காட்டி மிரட்டி பணம் பரித்தது சம்மந்தமாக வழக்கு பதிவு செய்து விசாரணை செய்வதாக சொன்னார்கள் என்றும், பின்னர் எங்கள்

முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், போலீசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. தற்போது எனக்கே தெரிந்த காரணத்தில் ஆஜர் எதிரிக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :- இல்லை.

**மறு விசாரணை :**- இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.20 11:59:07 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.